போன்று தனியார் துறையிலிருந்தும் மருத்துவ மனைகள் அமைக்கப்படுகின்றன. இதைத் தவிர வெளி நாடுகளிலிருந்து வருகின்ற அறச்செயல் புரிகின்றவர்கள் இந்தப் பணிகளிலே ஈடுபடுகின்றார்கள். எந்த அளவுக்கு இப்படிப்பட்ட தடுப்பு முறைகளை விரிவுபடுத்த முடியுமோ அந்த அளவுக்கு முயற்சிகள் செய்யப்படுகின்றன. இப்பொழுது ஓரளவு அறுவைச் சிகிச்சை முறையும் இதிலே புகுத்தப்பட்டிருக்கின்றது. இதன் மூலம் மருத்துவம் பெற்று வருகின்றவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கின்ற முறையிலே சிலபல வேலைகள் அவர்களுக்குப் பழக்கித் தர முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சென்னைக்கருகாமையிலே 750 பேர்கள் அப்படிப்பட்டவர்களை வைத்து எந்த வகையிலே அவர்களுக்குப் புனர் வாழ்வு தரலாம் என்பது பரிசிலனையில் இருந்து வருகிறது.

Directorate for Indigenous system of medicine.

* 153. Q.—THIRU K. VINAYAKAM :

THIRU K. SAHADEVA KANDER : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(a) whether the Government have decided to constitute a separate Directorate for indigenous systems of medicine; and

(b) if so, how soon?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) ஆம். இது அரசின் பரிசிலனையில் உள்ளது.

THIRU K. VINAYAKAM : I refuse to put any more supplementary questions, since I feel that I have not been treated properly in view of the pungent remarks passed by you against me.

திரு. கே. சகாதேவக் கண்டர் : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டுக்குச் சித்த வைத்திய முறை மிக மிக அவசியம் என்பதால் இதைச் சீக்கிரமாகப் பரிசிலனை செய்து விரைவிலே ஆரம்பிக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சித்த மருத்துவ முறைக்குத் தனியாக இயக்குநர் துறையொன்று வைக்க அரசாங்கம் பரிசிலித்துத் திட்டங்கள் வகுக்கப்பட்டு வேண்டிய முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படும். இதற்கென்று தனித் துறை ஒன்று அமைக்கப்பட்டு ஒரு இயக்குநர் நியமிக்கப்படுவார்.

DR. H. V. HANDE : Will this proposed Directorate take into consideration the grievances of students of Palayamkottai that they should be treated on a par with graduates of modern medicine? What is the present position? What is the method which the Government are going to adopt to redress the grievances of these boys and girls?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தனியாக இயக்குநர் போட்டு தனித்துறை அமைக்கப்படவேண்டுமென்ற கருத்து அரசாங்கத்தின் பரிசிலனையில் இருந்து கொண்டிருக்கிறது. அதைப்பற்றி முடிவு செய்ததற்குப் பிறகு பாளையங்

கோட்டை இந்திய மருத்துவக் கல்லூரியில் இருக்கின்ற பிரச்சினை கள் தீர்க்கப்பட்டு வருகின்றன—மாவட்டத் தலைநகரிலே இதற்காக ஒரு தனி விங் ஏற்படுத்தக்கூடிய அளவிலும் ஆராயப்பட்டு வரு கிறது. தனி இயக்குநர் அமைக்கப்பட்டதற்குப் பிறகு இந்தப் பிரச்சினைகளில் அதிகமாகக் கவனம் செலுத்தப்பட வேண்டியது எது என்பதைப் பார்த்து மேற்கொண்டு கவனம் செலுத்த அரசு முன்வரும்.

திரு. ஆர். நாகசுந்தரம் : தலைவர் அவர்களே, தலைமைச் செயல கத்திலே உள்ள சித்த மருத்துவ மனை நல்ல முறையிலே செயல் பட்டு வருகிறது. திருச்சியிலே உள்ள சித்த மருத்துவ மனையும் வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது. குறைந்த செலவில் நிறைந்த சிகிச்சை அளிக்கும் இப்படிப்பட்ட சித்த மருத்துவ மனை களை எல்லா மாவட்டங்களிலும் திறக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முதலிலே கூறியபடி இவை யெல்லாம் பரிசீலனையில் இருந்து வருகின்றன.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பரையாக சில குடும்பத்திலிருக்கிறவர்கள் நாட்டு மருந்துகள் தயாரித்து நல்ல முறையிலே சில பிணிகளைப் போக்குகின்ற முறை யிலே இருக்கின்றார்கள். அவற்றை யெல்லாம் மாவட்ட அடிப்படை யில் ஒரு ஆய்வாளர் நியமித்துத் தகவல்கள் சேகரித்து எல்லாப் பொது மக்களுக்கும் பயன்படச் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இதற்காகத் தனியாக இயக்குநர் போடப்பட்ட பிறகு ஆராய்ச்சி நிலையம் வைப்பது, உற்பத்தி நிலையம் வைப்பது போன்றவை பற்றிய நிலைமைகளைப் பரிசீலிக்கலாம். அப்படிப்பட்ட நிலைமையில் மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் கூறுவதைப் போன்ற முயற்சிகளையும் மேற்கொள்ள லாம்.

Physically handicapped qualified in typewriting

***154 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—**

(a) whether representations have been received from handicapped people requesting recognition of the examinations passed in typewriting from English Institutions some time in October, 1967; and

(b) if so, the details of the representations?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) இங்கி லாந்தில் 'லண்டன் பிட்மன் தேர்வு நிலையம்' நடத்தும் தட்டெ ழுத்துத் தேர்வு குறித்து சில விளக்கம் அளிக்குமாறு உடல் ஊன முற்ற திரு. பி. சங்கரநாராயணன் அவர்கள் அவரது 15-2-1967-ம்